தினகரன் புதுவை

# பன்னாட்டு நிறுவனத்துக்கான வேலைவாய்ப்பு முகாம்

## நகராட்சி ஆணையர் தொடங்கி வைத்தார்




▶ உழவர்கரை நகராட்சி சார்பில் நடந்த வேலைவாய்ப்பு முகாமை நகராட்சி ஆணையர் கந்தசாமி தொடங்கி வைத்தார்.

புதுச்சேரி, பிப். 25: உழவர்கரை நகராட்சி மற்றும் நவயுகா கன்சல்டன்சி சர்வீஸின் நகர வாழ்வாதார மையம் சார்பில் பன்னாட்டு நிறுவனத்திற்கான வேலைவாய்ப்பு முகாம் நேற்று புதுச்சேரி நவீன சுகாதார மீன் அங்காடி வளாகத்தில் உள்ள நகர வாழ்வாதார மையத்தில் நடந்தது. இந்த முகாமை உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி துவக்கி வைத்தார். காலை 9 மணிக்கு தொடங்கிய வேலைவாய்ப்பு முகாம் மதியம் 2 மணி வரை நடைபெற்றது. இதில் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். அவர்களில் எம்பிஏ, எம்.காம் பட்டதாரிகள் 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் தேர்வு செய்யப்பட்டவர்கள் அனைவரும் சென்னை ஸ்பென்சர் பிளாசாவில் உள்ள உலகின் தலைசிறந்த நிறுவனத்திற்கு நேர்முக தேர்வுக்காக அனுப்பி வைக்கப்படுவார்கள்.

மேலும், இந்த நேர்முக தேர்வில் தேர்ச்சி பெறும் அனைவரும் அவர்கள் திறமை மற்றும் முன் அனுபவத்திற்கேற்ப மாதம் ரூ.20 ஆயிரம் முதல் ரூ.30 ஆயிரம் வரையிலான சம்பளத்தில் சுழற்சி முறையில் நிரந்தர வேலையில் பணியமர்த்தப்படுவார்கள்.

இதுகுறித்து நகராட்சி ஆணையர் கந்தசாமி கூறுகையில், 'உழவர்கரை நகராட்சி மற்றும் நவயுகா கன்சல்டன்சி சர்வீஸ் இணைத்து நகர வாழ்வாதார மையத்தின் மூலம் உலகின் தலைசிறந்த பல்வேறு பன்னாட்டு நிறுவனத்திற்கான வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தி வருகின்றது. மேலும், பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சி, வேலைவாய்ப்பு முகாம், சுகாதார முகாம் போன்றவற்றை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது' என்றார்.

# உழவர்கரை நகராட்சி சார்பில் நாளை வேலைவாய்ப்பு முகாம்

புதுச்சேரி, பிப். 25: உழவர்கரை நகராட்சி ஆணையர் கந்தசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:



உழவர்கரை நகராட்சி மற்றும் நவயுகா கன்சல்டன்சி சர்வீஸின் நகர வாழ்வாதார மையம் சார்பில் நாளை (26ம் தேதி) புதுச்சேரி கொட்டுப்பாளையம், நவீன சுகாதார மீன் அங்காடி வளாகத்தில் உள்ள நகர வாழ்வாதார மையத்தில் டெக் மஹேந்திரா நிறுவனத்திற்கான வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது. இந்த வேலைவாய்ப்பு முகாம் காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை சென்னையில் உள்ள டெக் மஹேந்திரா நிறுவனத்தின் தொலைத்தொடர்பு செயல்பாட்டின் வாடிக்கையாளர் சேவை பணிக்காக நடைபெறவுள்ளது.

இதில் 2017, 2018, 2019ல் 12ம் வகுப்பு தேர்ச்சி, டிப்ளமோ மற்றும் இளநிலை பட்டம் தேர்ச்சி, தேர்ச்சி பெறாத மிதமான ஆங்கிலம் பேச தெரிந்த இளைஞர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

இதில் தேர்வு செய்யப்படுபவர்கள் அனைவரும் மாத சம்பளமாக ரூ.15 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை வழங்கப்படும். இந்த வேலையில் சேர விருப்பமுள்ளவர்கள் 24X7 என்ற விதத்தில் தினமும் 9 மணி நேரம் வேலை செய்ய வேண்டும். மேலும் வாரம் இரண்டு நாட்கள் விடுப்பு கொடுக்கப்படும். அடிப்படை தொழில்நுட்ப திறன் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். இந்த வேலை வாய்ப்பு முகாமில் இளைஞர்கள் அனைவரும் பங்கு பெற்று பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு 0413 - 4200993, 9843699455, 8940002141 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.